2001 ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31, திரு. லா. சந்தானம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

31—

பாலம் கட்டுதல்

***15670—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், இரும்பாடி மன்னாடிமங்கலம் கிராமத்திற்குக் குறுக்கே வைகை ஆற்றில் பாலம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியிருக்கின்ற இந்த இரும்பாடி மன்னாடிமங்கலம் கிராமத்தைச் சுற்றி ஏறக்குறைய 75,000 ஜனத்தொகை இருக்கிறது. அவர்கள் இந்த ஆற்றைக் கடந்து செல்வதற்கு, சோழவந்தான் வரை ஏறக்குறைய 10, 15 கிலோமீட்டர் தூரம் சுற்றித்தான் செல்கின்ற நிலை இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, அந்தப் பணிகளை எடுத்துக்கொள்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு மூன்று பாலங்கள் கேட்டார்கள். அவற்றையெல்லாம் கொடுத்து முடித்துவிட்டோம். இது மிச்சம் இருக்கிறது. இங்கேயாவது ஒரு பாலம் கட்டுங்கள் என்று கேட்கிறார். இது வைகையாற்றில் கட்டப்பட வேண்டிய பாலம். குறைந்தது 5 கோடி ரூபாய் இதற்காகத் தேவைப்படுகிறது. இந்த இரும்பாடி மன்னாடிமங்கலம் என்ற இந்த ஊருக்குப் பக்கத்தில் மூன்றாவது கிலோ மீட்டரில்தான், தென்கரை-சோழவந்தான் பாலம் இப்போது ரூ.4.30 கோடியில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இருந்தாலும் இது மாண்புமிகு உறுப்பினருடைய ஆசை; இதையும் கட்டினால் தேவலை

[2001 ஜனவரி 23

என்று கருதுகிறார். நிதி ஆதாரத்திற்குத் தக்கபடி எதிர்காலத்தில் இதுகுறித்து யோசிக்கலாம். இப்போது உடைந்த பாலங்களைக் கட்டுவது, உடையும் தருவாயில் இருக்கக்கூடிய பாலங்களைக் கட்டுவது, Major District Roads and State Highways என்று இருக்கக்கூடிய அப்படிப்பட்ட சாலைகளில் விடுபட்டிருக்கக்கூடிய பாலங்களைக் கட்டுவது ஆகிய மூன்றுக்கும்தான் தமிழக அரசு முன்னுரிமை வழங்குகிறது. எனவே, இந்தப் பாலத்திற்கு இப்போது முன்னுரிமை வழங்க இயலாது. எதிர்காலத்தில் யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

32—

சாலையை உயர்த்துதல்

***29667—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-கும்பகோணம்-திருச்சி நெடுஞ்சாலையில் சேத்தியாத்தோப்பு முதல் கூட்டு ரோடு வரை, மழை நீர் வடிவதற்காக உள்ள மூன்று தாம்போகிகளை மாற்றி, வீராணம் குழாய்கள் அமைத்து, சாலையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-25

திரு. ஏ.வி.ஏ. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-கும்பகோணம் சாலையில் சேத்தியாத்தோப்பு கூட்டு ரோடு அருகிலே மழைக் காலங்களிலே போக்குவரத்திற்கு இலாயக்கில்லாமல் மழைத் தண்ணீர் ஓடுகிறது; அந்தப் பகுதியில் உள்ள சாலைகளை